உ
முருகா



செந்தமிழ் வேள்விச் சதுரர், முதுமுனைவர்
**மு.பெ.சத்தியவேல் முருகனார்**
B.E., M.A., M.Phil, D.D, D.Lit. (USA)
12, முருகா அடுக்ககம், 11வது தெரு, நியூகாலனி, ஆதம்பாக்கம், சென்னை 600088
கைபேசி: +919444042770, மின்னஞ்சல்: mpsvelmurugan@gmail.com

# அருமை நண்பர் அரு.புட்பரதம், மொரீஸியஸ், அவர்களின் இரங்கற் கூட்டம் (26.10.2024)

சிவனுக்கு உகந்த கொன்றை மலி சிவபூமி நாடான மொரீசியஸ் தமிழன்பர்களே! பொன்னுடம்பு பெற்று மண்ணுடம்பு விட்டு ஏகினார் பேராசிரியர் புட்பரதம் என்ற செய்தி கேட்டு, துயரத்தின் உயரத்தை எய்தினேன்.

நாளும் தமிழ் வழிபாட்டை நாடெங்கும் பறையறைத்து பரப்பி வந்த ஒரு தமிழ் நெஞ்சம் தன் துடிப்பை நிறுத்தி நம்முடைய நெஞ்சங்களை எல்லாம் துடிக்கவிட்டுப் பிரிந்திருக்கிறது.

இன்று அந்த தூய ஆன்மாவிற்கு அஞ்சலிக் கூட்டம்! இப்போது உள்ளம் பதைபதைக்க, கண்கள் கண்ணீரை வார்க்க உங்கள் முன் நாத்தழுதழுக்க சொற்தடைப்பட்டு நிற்கின்றேன்.

"தோற்றம் உண்டேல் மரணம் உண்டு" என்று மீற இயலாத உலக இயற்கை விதியை ஆணித்தரமாக சுந்தரர் அறைந்து பாடினார். அப்படிப் பாடிய சுந்தராக்குத் தோற்றம் இருந்தது. ஆனால், அவர் மரணித்ததாக வரலாறு இல்லை. உடம்போடு கயிலைக்குச் சென்றார் என்று அருளாளர்கள் கூறிச் சென்றிருக்கின்றார்கள். எனவே, இயற்கை விதிப்படி எல்லோரும் மரணித்தே ஆக வேண்டும் என்பதில்லை என்பதும் உறுதியாகிறது.

இப்படித் தான் நால்வர் பெருமக்களில் ஒருவர் கூட உலகில் உடலைப் போட்டுவிட்டு மரணிக்கவில்லை. அவர்களுக்கு ஓரிடத்திலும் சமாதி இல்லை. இதன்வழி பார்த்தால், மூச்சும், பேச்சுமாக, நாளும் நால்வர் நெறியைப் பரப்பி வந்த புஷ்பரதம் ஐயாவிற்கு எப்படி மரணம் வரும்!

தமிழ்ப்பணி செய்தவர்கள் என்றும் சாவதில்லை என்று தமிழாய்ந்த பெரியவர்கள் எல்லாம் தரணிக்கு அறுதியிட்டு சொல்கிறார்கள். அந்த வகையில் புஷ்பரதம் ஐயாவிற்கும் என்றும் சாவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். காரணம், அவர் சார்ந்த தமிழ் - தெய்வத்தமிழ்; என்றுமுள தெய்வச் செந்தமிழ்! அதனால், தெய்வத்தன்மையோடு அவர் என்றும் இருப்பார், ஏன்? இங்கேயும் மொரீசியஸ் அன்பர்களிடையே இருக்கிறார். அவ்வளவு ஏன்? எங்கெல்லாம் உலகில் திருமுறைத் தமிழ் அன்பர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர் இருக்கிறார்; இருப்பார். உருவத்தோடா? இல்லை! அருவமாக புரியாட்டக ரூபத்தில்; பட்டினத்தார் கூறியபடி மாற்றிப் பிறக்கும் வகையறிந்து மாறி நிற்கிறார்.

சார்! இதெல்லாம் நம்பிக்கையாக இருக்கலாம்! ஆனால், சைன்ஸ் ஏத்துக்குமா? இப்படி சிலர் சந்தேகத்தோடு கேள்வி கேட்கலாம். அந்த சைன்ஸ் தான் சொல்லுது. ஒரு பொருளுக்கு எப்போது உருவம் இருக்கிறதோ அப்போதே அதற்கு அருவுருவமும் உண்டு; அருவமும் உண்டு. Solid State, Liquid State, Sublime State ன்னு இந்த மூன்றும் ஒவ்வொரு பொருளுக்கும் உண்டு. பனிக்கட்டி-உருவம்; நீர்-அருவுருவம், நீராவி-அருவம்! இதையார் மறுக்க முடியும்! சைன்ஸ் ஏத்துக்குதே!

அதனால் இப்போது புஷ்பரதம் அருவ உடலில் இருப்பார்; அதாவது புரியட்டகரூபம் எனப்படும் அருவ உடலில் இருப்பார். அந்த உடல் முன்னால் உருவத்தோடு இருந்தது என்பதனாலேயே அந்த உடம்புக்கு அருவ நிலையும் இருந்தாக வேண்டும் என்பது தானே சைன்ஸ்படி நியதி. எனவே, இப்படி கூறுவது ஒரு நம்பிக்கை உரையில்லை; தர்க்க ரீதியான, விஞ்ஞானமும் ஒப்புக் கொள்ளும் இயற்கை உண்மையாகத் தானே இருக்க

வேண்டும். நாம புரியட்டகரூபம் என்கிறோம், சைன்ஸ் Astral Body என்கிறது. இரண்டும் ஒண்ணு தான்! இதனால் புஷ்பரதம் ஐயா Astral Body யோடு நம் கண்ணுக்குப் புலனாகாமல் இங்கே நம்மோடு தான் இருக்கிறார். அதில் சந்தேகமே இல்லை. அருவம்னா கண்ணுக்குப் புலனாகவில்லை என்று தான் அர்த்தமே ஒழிய அப்படி ஒரு பொருளே இல்லை என்று அர்த்தம் ஆகாது.

ஆக, இந்த மறுக்க இயலாத விஞ்ஞான இயற்கை உண்மையை மனதில் வைத்துக் கொண்டு தான் இங்கே அவர்க்கு அஞ்சலி செலுத்த வேண்டும்! தமிழர்களாகிய நாம் எதைச் செய்தாலும் அறிவோடு செய்ய வேண்டும்; அறிவுக்கு மாறாக எதையும் செய்யக்கூடாது; வழிபாட்டைக் கூட அறிவோடு செய்க என்கிறார் சம்பந்தர்! நுண்ணறிவால் வழிபாடு செய்வார்க்கு உடையான் என்பது சம்பந்தர் வாக்கு! இது தான் தமிழர் நெறி.

எனவே, இது புஷ்பரதம் ஐயா அவர்களின் இரங்கற் கூட்டம் மட்டும் அன்று; அவரே இறங்கியிருக்கும் கூட்டம்.

இனி, அவரது அருவ முன்னிலையில் அவரது அளப்பரிய தமிழ்ப் பணிகளை, தமிழ்வழிபாட்டுப் பணிகளை சிந்திக்கலாம்.

இங்கே இருக்கிற ஒவ்வொருவர்க்கும் அவரோடு பழகிய, இணைந்து பணியாற்றிய, பார்த்து வியந்த அனுபவம் நிறைய இருக்கும்; கேட்டால், ஒவ்வொருவரும் மணிக்கணக்கில் நினைவுகளை மலர்த்தி, முட்டி வரும் கண்ணீரை உலர்த்தி, அவர் புகழ்மணம் பரப்புவார்கள் என்பது நிச்சயம்! அந்த வரிசையில் அடியேன் அவரோடு அடைந்த என் அனுபவப் பெட்டியை உங்கள் முன்னால் இப்போது சற்று திறக்க முற்படுகின்றேன்.

ஐயா அவர்கள் என் அறிமுகம் பெற்றது எப்படி என்று ஒரு நூலில் எழுதியுள்ளார். அது நான் எழுதி வெளியிட்ட வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள் என்ற ஆங்கில நூலுக்கு அளித்த அணிந்துரை. அதில் அவர் இப்படி விவரிக்கிறார்.

"I, for my part, knew nothing about M.P. Sathiyavel Muruganaar, until, I received a copy of his book "Senthamizh Kuda Nanneeraatu Nannool" in 2002. The book revealed to me the author's profound erudition in the subject. I, personally met him in early 2003 in Tamil Nadu. At that time, I invited him to mauritius. It was in 2006 on the occasion of Thaipoosam Cauvadi".

அவரே கூறியபடி அடியேங்கள் இருவரும் முதன் முதலில் சந்தித்தது 2003 ஆம் ஆண்டில் அடியேனது வீட்டில் தான். அநேகமாக அது மார்ச் மாதமாக இருக்கும்.

அந்த முதல் சந்திப்பிலேயே எங்கள் தொடர்பு என்பது அதற்கு முன்னமே பல பிறவிகளில் தொடர்ந்து வந்த ஜன்மாந்தரத் தொடர்பு என்பதை உள்ளுணர்வாய் உணர்ந்தோம்.

தமிழில் ஒரு சொல் உண்டு, அதாவது உழுபலன்பர் என்பது அது. பல பிறவி அனுபவத்தால், ஊழின் உந்துதலாய் நேரும் சந்திப்பில் சந்திக்கும் அன்பர் என்பது அதன் பொருள் ஊழ்வல் அன்பர் என்பது உழுவலன்பர் என்று மாறும்.

பண்டை ஊழால் காதலனும், காதலியும் குறிப்பிட்ட ஒரு பிறவியில் மீண்டும் சந்திப்பது போலத்தான் இதுவும். இங்கே அந்த முறுகிய நட்பு மீண்டும் ஊழால் தொடரும். எங்கோ இருந்த சேரமான் பெருமாள் நாயனாரைச் சுந்தரரோடு நடராசர் கூட்டி வைத்தது போல என்க. இருவருமாகச் சேர்ந்து மொரீசியஸ் நாட்டில் தமிழ் வழிபாட்டை கொண்டு செலுத்துக என்று எங்களை இறைவன் கூட்டி வைத்தான் என்றே உண்மையாகவே நம்புகிறேன்.

நேர்ந்த முதல் சந்திப்பு மென்மேலும் இறுகிட, அடியேன், அவர் அழைக்க பல முறை மொரீசியஸ் நாட்டிற்கு வந்துள்ளேன். அதன்வழி உங்களைப் போல எனக்குக் கிடைத்த மொரீசியஸ் சொந்தங்கள் பலர்.

இவ்வாறு பழக்கம் வளர வளர, ஐயா அவர்கள் அடியேனைப் பற்றி எழுதிய அன்புத் தேன் தடவிய சொற்களை என்னென்று சொல்லுவேன். எனது நூலில் அணித்துரையில் அவர் இப்படி எழுதுகிறார்.

"M.P. Sathiyavel Muruganaar is one of those rare Scholars who have distinctively understood all the complex ritualistic aspects connected with life from birth to death.

இவ்வாறு இணைந்து தமிழ் வழிபாட்டை மொரீசியஸில் பரப்ப வாய்ப்புகளை இறைவன் கூட்டினான். அங்கே தமிழ் வழிபாட்டுப் பயிற்சி வகுப்புகளை அவரது ஏற்பாட்டில் அன்பர்களுக்கு எடுத்துள்ளேன்.

அதோடு, மொரீசியஸ் நாட்டிற்கென்றே முற்றும் முழுதுமாக தமிழில் பஞ்சாங்கத்தை அடியேன் வகுத்தளிக்க அவரே காரணமாய் இருந்தார். அங்கு நாட்டின் நான்கு திசை மண்டலங்களிலும் அழைத்துச் சென்று ஆங்காங்குள்ள கோவில் அர்ச்சகர்களைக் கூட்டி கூட்டங்களை ஏற்பாடு செய்தார். அதன்வழி அடியேன் அவர்களின் ஐயங்களைப் போக்க, மொரீசியஸ் அரசு அடியேன் வகுத்த தமிழ்ப் பஞ்சாங்கத்தை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைக்கு 2012ம் ஆண்டில் கொண்டு வந்தது.

இது பற்றி ஐயா எழுதுவதாவது.

"It was in 2012, in the context of providing certain data relevant to us based upon Panchangam. The Brahmin priests of Tamil Nadu who are employed in our Kovils have been leading us by the nose, contesting the authority of the apex body namely the Mauritius Tamil Temples Federation (MTTF).

Besides, drawing up the data supported by Scientifically correct astronomical explanations, M.P. Sathiyavel Muruganaar exposed Brahmin Priests shallowness and ignorance. The data which he provided were corroborated by our country's astro-physiest Dr. Somnah, who had received recognition by NASA in the field.

இன்னும் இது போல பல நிகழ்வுகள் என் நினைவில் வந்து நிழலாடுகின்றன. சொல்லப் புகுந்தால் நேரம் நீளும்.

எனவே, உங்களுக்கும், என் அன்னையே போன்ற அவரது துணைவியார்க்கும் எனது ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்து ஐயாவிற்கு இந்த இரங்கற்பாவை அர்ப்பித்து நிறைவு செய்கிறேன்.

## இரங்கற்பா

**பொன்னான புட்பரதப் பேராளா செந்தமிழின்**
**முன்னான வழிபாட்டை முன்னிறுத்தி - எந்நாளும்**
**ஏத்தி வளர்த்தாயே ஏந்தலே! என் நட்பே!**
**வாழ்த்தி வணங்கினம் யாம்.**

முதுமுனைவர்
**மு.பெ.சத்தியவேல் முருகனார்**